# உலக அரங்கில் தமிழருக்கு பெருமை சேர்த்தவர் எம்.எஸ். சுப்புலட்சுமி

## ஆர்.எம். வீரப்பன் புகழாரம்



இசை-நாட்டிய கலைஞர் சங்கம் சார்பில் சென்னையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இசைக் கலைஞர் 'எம்.எஸ். சுப்புலட்சுமி விருது' வழங்கும் விழாவில் விருதுகள் பெற்ற கர்நாடக இசைக் கலைஞர்கள் காயத்ரி வெங்கட்ராகவன், காஷ்யப் மகேஷ் ஆகியோருடன் (இடமிருந்து) சங்கத்தின் செயலாளர் வழுவூர் ரவி, கிருஷ்ணா ஸ்வீட்ஸ் மேலாண்மை இயக்குநர் எம். முரளி, சென்னை தொலைக்காட்சி முன்னாள் இயக்குநர் ஏ. நடராஜன், 'தினமணி' ஆசிரியர் கே. வைத்தியநாதன், தமிழக முன்னாள் அமைச்சர் ஆர்.எம். வீரப்பன், இயல் இசை நாடக மன்றச் செயலாளர் கவிஞர் இளையபாரதி ஆகியோர்.

**சென்னை, செப். 11:** ஐக்கிய நாடுகள் சபையிலும், உலகின் பல நாடுகளிலும் பாடி உலக அரங்கில் தமிழுக்கும், தமிழருக்கும் பெருமை சேர்த்தவர் எம்.எஸ். சுப்புலட்சுமி என கம்பன் கழகத் தலைவரும், தமிழக முன்னாள் அமைச்சருமான ஆர்.எம். வீரப்பன் புகழாரம் சூட்டினார்.

கர்நாடக இசைக் கலைஞர் எம்.எஸ். சுப்புலட்சுமியின் பிறந்த நாள் விழா சென்னை மயிலாப்பூர் ராகசுதா அரங்கில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இசை-நாட்டிய கலைஞர்கள் சங்கம் சார்பில் நடைபெற்ற அந்நிகழ்ச்சியில், சிறந்த இசைக் கலைஞர்களுக்கு எம்.எஸ். சுப்புலட்சுமி விருது வழங்கப்பட்டது.

காயத்ரி வெங்கட்ராகவனுக்கு 'தினமணி' ஆசிரியர் கே. வைத்தியநாதனும், காஷ்யப் மகேஷுக்கு ஆர்.எம். வீரப்பனும் விருதுகளை வழங்கினர்.

விழாவுக்கு தலைமை வகித்த ஆர்.எம். வீரப்பன் மேலும் பேசியதாவது:

உலக அரங்கில் தமிழுக்கும், தமிழருக்கும் பெருமை சேர்த்து தந்தவர் இசையரசி எம்.எஸ். சுப்புலட்சுமி. எனது 10 வயது முதல் அவரது பாடல்களைக் கேட்டு வருகிறேன். 1934-ம் ஆண்டு சென்னை மியூசிக் அகாதெமி அரங்கில் மாபெரும் இசைக்கலைஞர் அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் இசை நிகழ்ச்சி நடைபெறுவதாக இருந்தது. ஆனால் அவரால் நிகழ்ச்சிக்கு வரமுடியவில்லை. அந்நேரத்தில் அம்மாபெரும் கலைஞருக்கு மாற்றாக மேடையேறி பாடி புகழ் பெற்றவர் எம்.எஸ். சுப்புலட்சுமி. அப்போது அவருக்கு வயது 16 மட்டுமே.

அவரது குரல் வளம், இனிமை, இசைத் திறன் ஆகியவற்றால் புகழ் பெற்றார். ஐக்கிய நாடுகள் சபையில் பாடும் அளவுக்கு அவர் புகழ் பெற உறுதுணையாக இருந்தவர் அவரது கணவர் சதாசிவம்.

பாரதியின் பாடல்களுக்கு பெருமை சேர்த்தவர்கள் டி.கே. பட்டம்மாளும், எம்.எஸ். சுப்புலட்சுமியும் ஆவார்கள்.

தனது ஆற்றல், சம்பாதித்த பணம், ஈட்டிய புகழ் ஆகிய அனைத்தையும் மற்றவர்களுக்கு தந்து, உயர்ந்தவர் எம்.எஸ். சுப்புலட்சுமி. வாழ்க்கையில் தனக்கென்று சொந்த வீடு கூட இல்லாமல் வாழ்ந்து மறைந்த பெரும் இசைக் கலைஞர் அவர் என்றார் ஆர்.எம். வீரப்பன்.

முன்னதாக வரவேற்புரையாற்றிய இசை-நாட்டிய கலைஞர்கள் சங்க செயலாளர் வழுவூர் ரவி, எம்.எஸ். சுப்புலட்சுமி, திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை ஆகியோருக்கு சென்னையில் சிலை அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்து பேசினார்.

விருது வழங்கிப் பேசிய தினமணி ஆசிரியர் கே.வைத்தியநாதன் காயத்ரி வெங்கட்ராகவனுக்கும், காஷ்யப் மகேஷுக்கும் மேலும் பல விருதுகள் வந்து குவிய வேண்டும் என்று வாழ்த்தினார்.

மேலும் அவர் பேசுகையில், "எம்.எஸ். சுப்புலட்சுமியின் பெயரால் வழங்கப்படும் உயரிய இந்த முதல் விருதைப் பெறுவது காயத்ரிக்கு முதல் சிறப்பு.

இந்த ராகசுதா அரங்கை உருவாக்கிய எஸ்.வி. கிருஷ்ணன் உயிரிழக்கும் முன்பு கடைசியாக தொலைபேசியில் பேசியது காயத்ரியுடன்தான்.

காயத்ரி மாபெரும் இசைக் கலைஞராக வளர வேண்டும் என ஆசைப்பட்ட எஸ்.வி. கிருஷ்ணன் உருவாக்கிய இந்த அரங்கில் காயத்ரி விருது பெறுவது இன்னொரு சிறப்பு. எஸ்.வி.கே.யின் ஆசி அவருக்கு பரிபூரணமாக இருக்கிறது என்பது தான் இந்த விருது உணர்த்தும் உண்மை. எம்.எஸ். சுப்புலட்சுமி இசையைத் தவமாகக் கொண்டிருந்தார். அது ஒரு தெய்வீக தவம். மற்ற கலைஞர்களைவிட அவருக்கு இருந்த இந்த தனிச்சிறப்பு காரணமாகத்தான் அவருக்கு 'பாரத ரத்னா' விருது கிடைத்தது. அவரால் ஐக்கிய நாடுகள் சபையில் பாட முடிந்தது.

அத்தகைய சிறப்புக்குரிய கலைஞருக்குத் திருப்பதியில் சிலை வைத்திருக்கிறார்கள். நாம் இன்னும் தமிழகத்தில் சிலை வைக்கவில்லை என்பது தலைகுனிவாக இருக்கிறது.

சென்னையில் அந்த இசை அரசிக்கு இதுவரை சிலை அமைக்காதது நமக்கு பெரும் இழுக்காகும். சென்னை நகரின் மையப் பகுதியில் அவருக்கு சிலை அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஆண்டு இசை விழாவின் போதும், ஒவ்வொரு கலைஞரும் அவரது சிலைக்கு மாலை அணிவித்த பின் தான் பாடச் செல்ல வேண்டும் என்கிற நிலைமை ஏற்பட வேண்டும் என்றார் தினமணி ஆசிரியர் கே.வைத்தியநாதன்.

## ஏ.நடராஜன்



நான் 8-ம் வகுப்பில் இருந்து எம்.எஸ்.சுப்புலட்சுமி பாடல்களை கேட்டு வந்திருக்கிறேன். அவர் பாட்டில் மட்டும் நட்சத்திரம் இல்லை. பண்பாட்டிலும் துருவ நட்சத்திரம் போன்றவர்.

அவருக்கு இவ்வளவு பெரிய உயர்வு தானாக வந்துவிடவில்லை. சங்கீதத்தில் மட்டுமின்றி மற்றவர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற இங்கிதத்திலும் சிறந்து விளங்கியதால்தான் உயர்வு பெற்றார். நான் அகில இந்திய வானொலி நிலையத்தில் பணிபுரியும்போது வானொலியில் பாட வருவார் எம்.எஸ்.சுப்புலட்சுமி. கொஞ்சம் கூட பந்தாவோ, தான் பெரிய பாடகி என்கிற கர்வமோ இல்லாமல் கடைநிலை ஊழியருக்கு கூட மதிப்பும் மரியாதையும் தந்து அவர் பழகும் விதம் அத்தனை பேரையும் அவரிடம் அன்பு பாராட்ட வைத்துவிடும்.

எந்தவொரு நல்ல காரியம் என்றாலும், அதற்கு உதவ அவரது இசை தயாராக இருந்தது. இந்த விஷயத்தில் அவருக்கு நிகர் அவர் மட்டுமே.

கர்நாடக சங்கீதத்தின் கொடியை முதன்முதலில் உலக அரங்கில் உயரத் தூக்கிப் பிடித்தவர் எம்.எஸ்.சுப்புலட்சுமிதான்.

## எம். முரளி



எம்.எஸ்.சுப்புலட்சுமியை நான் நேரில் எத்தனையோ முறை சந்தித்திருக்கிறேன். ஆனால் சிறு வயதில் என்னையும், என் தம்பியையும் அழைத்துச் சென்று தொலைக்காட்சி இயக்குநர் நடராஜன் அறிமுகம் செய்து வைத்ததை என்னால் மறக்க முடியாது. என் வாழ்வில் மறக்க முடியாத, மிகவும் சந்தோஷமான நாளில் அதுவும் ஒன்று.

எம்.எஸ்.சுப்புலட்சுமி என்பதே ஒரு தெய்வீகச் சொல். அவரது பெயரால் இன்று விருது வாங்கியவர்களுக்கு நிச்சயம் மேலும் பல விருதுகள் குவியும்.

## கவிஞர் இளையபாரதி



மகாத்மா காந்தியடிகள் கூறியதுபோல எம்.எஸ்.சுப்புலட்சுமியின் வாழ்க்கையே மக்களுக்கான ஒரு செய்தியாகும். அவர் மீது முதல்வர் கருணாநிதி மிகுந்த மரியாதை வைத்துள்ளார். எனவே, எம்.எஸ்.சுப்புலட்சுமிக்கு சென்னையில் சிலை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை நிச்சயம் மிக விரைவில் நிறைவேறும்.